www.tamilarangam.net



# கொடும் சிங்களப் படகுகள் அழிந்தது! சிறப்புடன் கடற்கரும்புலிப் படை வென்றது!!

கடல்புலி கரும்புலி உயிர்ப்பிலே
கடலே எரிந்தது நெருப்பிலே
கொடும் சிங்களப் படகுகள் அழிந்தது.
கடற்கரும்புலிப்படை வென்றது
பாரதம் வென்ற புலிப்படையின்
படகது சென்றிடும் கடலிதுதான்
சங்கத் தமிழது மூழ்கியே
கடலினில் தோழர்கள் மூழ்கினர்
சங்கத் தமிழுடன் எழுந்தனர்
தரணியில் புதுக்கதை எழுதினர்
யாதும் ஊரே யாவரும் கேளிர்
என்றான் சங்கத் தமிழனவன்
தமிழ்ப் படை வீரம் கேளா உலகெது
என்பவன் ஈழத் தமிழனவன்

தமிழீழக் கடற்பரப்பில் அத்துமீறி உள்நுழைந்த சிங்களக் கடற்படையின் பாரிய கப்பல்கள் இரண்டிற்கு கடற்கரும்புலிகள் கடலில் வைத்து சமாதி கட்டி காவியம் படைத்துள்ளார்கள். இந்தக் காவிய நாயகர்கள் கப்பல்களோடு சேர்ந்து ஐம்பதுக்கும் மேலான எதிரிப்படையினருக்கும் கடலில் வைத்து கல்லறை கட்டியுள்ளார்கள்.

சிறிது கால இடைவெளிக்குப்பின் கடற்கரும்புலிகள் மீண்டும் எதிரியோடான கடற்சமரில் சாதனை புரிந்து சரித்திரம் படைத்துள்ளார்கள். 1990ம் ஆண்டு தோற்றம் பெற்ற கரும்புலிப் படை தமிழீழக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படைக்கு எதிராக நடாத்திய மிகப்பெரிய கடற் போர் இதுவாகும்.

கடற்கரும்புலிகள் எதிரிப்படை கொஞ்சமும் எதிர்பாராத நேரத்தில் எதிர்பாராத இடத்தில் இந்தத் துணிகரத் தாக்குதலைத் தொடுத்து அதை வெற்றிகரமாக முடித்துள்ளார்கள்.

> தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து தமிழ் மக்களைத் துப்பாக்கி முனையில் அடக்கி ஆளக் கங்கணம் கட்டிநிற்கும் அந்நியப் படையான சிங்களப் படையை எதிர்த்து புதிய புறநானூறு படைக்கும் புலிப்படை, தரையிலும் – கடலிலும் – வான்பரப்பிலும் நாளும் பொழுதும் தாக்குதல்கள் தொடுத்துப் போராடி வருகிறது.

இந்தக் கடற்போரில் 'பாப்பதா' என்ற சரக்குக் கப்பலும் வலம்புரி என்ற தரையிறங்கு கப்பலும் கடற்புலிகளின் தாக்குதலின்போது மூழ்கடிக்கப் பட்டுள்ளது. இவ்விரு கப்பல்களிலுமிருந்த ஐம்பதிற்கும் மேற்பட்ட இராணுவத்தினர் –கடற் படையினர் கொல்லப்பட்டுள்ளார்கள். 'பாப்பதா' கப்பலில் இருந்த இரண்டு கவச வாகனங்கள் கப்பலோடு மூழ்கடிக்கப்பட்டுள்ளது. இதைவிட பல கனரக வாகனங்கள் ஆயுதங்கள் கடலில் மூழ்கடிக்கப் பட்டுள்ளதாக நம்பப் படுகிறது.

கடற்போரின் கனபரிமாணத்தை அளவிடுவதற்கு தாக்குதல் வலையத்தில் காணப்பட்ட சிறிலங்காவின் கடற்படையின் அன்றைய பலத்தை பட்டியலிட்டுப் பார்ப்பது துணையாக இருக்கும்.

கடற்புலிகளின் பிரதான கப்பல் தளமான முல்லைத்தீவுக்கு வடக்கே அமைந்துள்ள சாலையை ஒரு முறையல்ல பலமுறை சிறிலங்கா விமானப்படை விமானங்கள் குண்டு வீசித்தாக்கி புலிகளின் படகுகளை டசின் கணக்கில் அழித்து விட்டதாக பாதுகாப்பு அமைச்சு பிரசாரம் செய்து கொண்டிருக்கும் போது கடற்புலிகளின் படையணி இந்தத் தாக்குதலை மேற்கொண்டு சிறிலங்கா கடற்படைக்குப் பாரிய அழிவை ஏற்படுத்தி இருக்கிறது.

"விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரில் 96 விழுக்காட்டை வென்று விட்டோம். மீதி 4 விழுக்காட்டை விரைவில் வென்றுவிடுவோம்" என்று துணைப் பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தை ஊரெல்லாம் தம்பட்டம் அடித்துச் சொல்லிக்கொண்டு திரிந்த நேரத்தில் இந்தத்தாக்குதல் நடை பெற்றுள்ளது.

'பாப்பதா', 'வலம்புரி' மற்றும் கடற்புலிகளின் தாக்குதலில் இருந்து மயிரிழையில் தப்பிவிட்ட 'சக்தி' ஆகிய மூன்று கப்பல்களுக்கும் மொத்தம் ஆறு கப்பல்கள் – இரண்டு பீரங்கிக் கப்பல்கள், நான்கு இஸ்ரேலிய தயாரிப்பு அதிவேக டோராப் படகுகள் பாதுகாப்புக்கு அணிவகுத்து வந்திருந்தன. கடற்போர் பெப்ரவரி 22ம் திகதி ஞாயிற்றுக் கிழமை பி. ப. 7.45 மணிக்கு ஆரம்பித்து மறுநாள் – திங்கள் காலை 2 மணி வரை நீடித்துள்ளது.

கடற்புலிகள் தங்களது பிரதான முல்லைத்தீவு சாலை கடல் தளத்திலிருந்து சுமார் 70 கடல் மைல்களுக்கு அப்பால் இந்தத் தாக்குதலை மேற்கொண்டிருக்கின்றனர்.

சிறிலங்கா கடற்படையின் தொடரணி கரையிலிருந்து 25 கடல்மைல்களுக்கு அப்பால் பயணம் செய்து கொண்டிருந்தன.

**நக்கீரன்**

கடற்போரின் முதற் கட்டச் சமர் பருத்தித்துறை கடலில் இருந்து 10 கடல்மைல் தூரத்தில் இடம் பெற்றது.

முதலில் 'வலம்புரி' கடற்கரும்புலிகளினால் வெடிமருந்து நிரப்பப்பட்ட படகுகள் மூலம் மோதி கரையில் இருந்து 10 கடல் மைல்களுக்கு அப்பால் மாலை 8 மணிக்கு தாக்கி மூழ்கடிக்கப்பட்டது.



பின்னர், இரண்டாவது கப்பல் 'பாப்பதா' கடற்கரும்புலிகளினால் காங்கேசன்துறை கடற் பரப்பில் வைத்து மாலை 9.30 மணிக்குத்தாக்கி அழிக்கப்பட்டது.

சனாதிபதி சந்திரிகா ஆட்சிக்கு வந்தபின் (1994) புலிகளினால் தாக்கி அழிக்கப்பட்ட 12வது கடற்படைக் கப்பல் இதுவாகும். 'வெஸ்பேர்ஸ்' என்ற நிறுவனத்தால் சிங்கப்பூரில் தயாரிக்கப்பட்ட இந்தக் கப்பல் 1985ம் ஆண்டு லலித் அத்துலத் முதலி தேசிய பாதுகாப்பு அமைச்சராக இருந்த காலத்தில் வாங்கப்பட்ட இரண்டு தரையிறக்கிக் கப்பல்களில் ஒன்றாகும். மற்றைய கப்பலான 'கந்துலா' 1992 ஆம் ஆண்டு கற்பிட்டிக் கடற்பரப்பில் தரைதட்டி மூழ்கியது.

மேலும் மூன்று டோராப் படகுகள் சேதமாக்கப்பட்டன. ஐந்நூறுக்கும் மேலான இராணுவத்தினரை ஏற்றிக் கொண்டு வந்த 'சக்தி' என்ற இன்னொரு கப்பல் மயிரிழையில் தப்பியது. வீரகாவியம் படைத்த – இந்த இரண்டு கப்பல்கள் மீதான தாக்குதலில் மொத்தம் நான்கு பெண் கரும்புலிகளும் நான்கு ஆண் கரும்புலிகளும் வீரமரணம் எய்தினார்கள்.

டோராக் கப்பல் மீதான தாக்குதல் முயற்சியில் எதிரியின் குண்டுபட்டு மேலும் மூன்று கரும்புலிகள் வீரமரணம் எய்தினார்கள்.

இந்தக் கடற்போரின் போது மொத்தம் பதினொரு கடற்கரும்புலிகள் தமிழீழ விடுதலைக்கான போரில் புதிய கதையெழுதி 'தமிழீழக் கடலில் சங்கமமானார்கள். தரைப்பாதை அடைக்கப்பட்ட நிலையிலும், வான் பாதை பல விமானங்களின் இழப்பினால் முடக்கப்பட்ட நிலையிலும், சிறிலங்கா இராணுவம் வடக்குக்கான ஆளணி, தளபாட நகர்வுகளுக்கு கடற்படையையே நம்பியிருக்கிறது. எனவே, சிறிலங்காக் கடற்படையின் பலத்தை உடைப்பது விடுதலைப் புலிகளின் இலாக்காக இருந்து வருகிறது. இந்தப் பணி தளபதி சூசையின் தலைமையிலான கடற்புலிகளின் படையணிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

தமிழீழ மண்ணை ஆக்கிரமித்து தமிழ் மக்களைத் துப்பாக்கி முனையில் அடக்கி ஆளக் கங்கணம் கட்டிநிற்கும் அந்நியப் படையான சிங்களப் படையை எதிர்த்து புதிய புறநானூறு படைக்கும் புலிப்படை, தரையிலும் – கடலிலும்– வான்பரப்பிலும் நாளும் பொழுதும் தாக்குதல்கள் தொடுத்துப் போராடி வருகிறது. இந்தத் தாக்குதல்கள் வடக்கிலும் – கிழக்கிலும் ஒவ்வொரு நாளும் நடந்த வண்ணம் உள்ளன. இந்த மாதத்தில் மட்டும் இடம்பெற்ற முக்கிய தாக்குதல்களைப் பட்டியல் போட்டுப் பார்ப்பதன் மூலம் இத்தாக்குதல்களின் உக்கிரத்தையும் எதிரிக்கு ஏற்பட்ட ஆள், ஆயுத இழப்புக்களையும் கணக்கிட்டுக் கொள்ளலாம்.

பெப்ரவரி. 11 – மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இராணுவத்தின் வாகனத் தொடர்மீது விடுதலைப் புலிகள் நடாத்திய கிளைமோர்த் தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். 25 பேர் காயப்பட்டனர்.

பெப்ரவரி 15 – மிருசுவிலில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் 7 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். ரி 56 துப்பாக்கி உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன. பண்டத்தரிப்பில் கிளைமோர் கண்ணிவெடித் தாக்குதலில் 3 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர்.

பெப்ரவரி 21 – சீச்சக்காடு எனும் இடத்தில் புலிகள் மீது தாக்குதல் நடாத்தவென வந்த சிறிலங்காப் பொலிசாரையும் ஊர்காவல் படையினரையும் புலிகள் எதிர்பாராது இடைமறித்து நடாத்திய அதிரடித் தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டனர்.

பெப்ரவரி 24 – மட்டக்களப்பு – பொலநறுவை, வெலிகந்த எல்லைக் கிராமமான கட்டுவன்வில காவல் நிலையம் விடுதலைப் புலிகளால் தாக்கப்பட்டதில் 16 பொலிசார் கொல்லப்பட்டனர். மேலும் 6 பேர் காயப்படுத்தப்பட்டனர். 60 மி. மீட்டர் மோட்டார் உட்பட பல ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டன.

தொடர்ச்சி 15 ம் பக்கம்.....

www.tamilarangam.net



# அரசியல்வாதிகளின் வாக்குறுதிகளும் வார்த்தையாலங்களும்!

## யுத்தக்கைதியாய் சிறீலங்கா!!

சிறீலங்காவின் பாதுகாப்புச் செலவீனம், 'ஜெற்' வேகத்தில் ஏறிக் கொண்டிருக்கின்றது – அதன் மரண வீதத்தைப்போல. பெரும் அழிவின் மையமாய் இன்று சிறீலங்கா ஆகிவிட்டதில் – வருத்தப்படும் நிலையில் – சிங்களத்தலைவர்கள் இருப்பதாய் தெரியவில்லை. யுத்தத்தைக் கூறி, அதனால் ஏற்படும் அழிவைக்கூறி, மரணத்தைக் கூறி, விதவைகளின் கண்ணீர்க் கதையைக் கூறி ஆட்சிக்கு வந்த சந்திரிகா அம்மையாரின் ஆட்சியில் யுத்தமும் அதன் செலவீனமும் மரணமும் அழிவும் எல்லைதாண்டி பிசாசுத்தனமாக தீவையே உலுப்பிக் கொண்டிருக்கின்றது.

விடுதலைப் புலிகளை எவ்விதம் மடக்கலாம்; தமிழ்மக்கள் மத்தியில் இருந்து அவர்களை எவ்விதம் அகற்றலாம்; முனைப்புற்று நிற்கும் விடுதலை உணர்வை எவ்விதம் அடக்கலாம் – அழிக்கலாம் என்ற வஞ்சகத் திட்டத்தை அத்திவாரமாகக்கொண்டு கட்டப்பட்ட பேச்சுவார்த்தை என்ற மணவீடு, சிதைந்து தரைமட்டமாகியதில் இருந்து இன்றுவரை பல்லாயிரக்கணக்கான உயிர் விலையை இந்த யுத்தம் காவு கொண்டிருக்கின்றது. பெரும் தொகைப் பணத்தை, தீவின் வளத்தை இந்த யுத்தம் கந்தகப் புகையால் கரிக்கியிருக்கின்றது.

**– சுப்பு –**

அம்மையாரின் ஆட்சியிலேயே இந்த அழிவின் வீதம் உச்சிதொட நிமிர்ந்திருக்கின்றது.

தன்னைச் சுற்றிப் போர்த்தியிருந்த ஒவ்வொரு வாக்குறுதிகளையும் துறந்து, ஆட்சியின் ஐந்தாண்டு முடிவில் அவர் உண்மைத் தோற்றத்தை அடைவதை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றார்.

தேர்தல் வாக்குறுதியின்படி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவந்தபாடில்லை. யுத்தச் செலவை நிறுத்தி நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்தல் என்ற வாக்குறுதி முரட்டுத்தனமாக மீறப்பட்டிருக்கின்றது. என்றும் இல்லாத வகையில், கடந்த ஆண்டுகளைவிட இந்த ஆண்டு யுத்தச் செலவீனங்களுக்கு அதிக தொகையை சந்திரிகா அரசு ஒதுக்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

உயிர்களைக் காத்தல், விதைவைகளின் கண்ணீர் துடைத்தல் என்ற இரவுநேர தேர்தல் பிரச்சார நாடகப்பாடல் விடிந்ததும் மறந்ததுபோலாகிவிட்டது. சந்திரிகாவின் ஆட்சியிலேயே யுத்தத்தால் அழிந்துபோனவர்களின் தொகை அதிகம் என்பதும் வெளிப்படை. பொருளாதாரத்தை நிமிர்த்துதல் என்ற வார்த்தை முழக்கமும் அரசியல் வாதிகளின் வெறும் பழக்கதோச உத்தர வாதம்போலாகிவிட்டது. சிறீலங்கா நாட்டின் பொருளாதாரம் பாதாளம் நோக்கி உருண்டுகொண்டிருக்கின்றது.

முன்னைய ஆட்சியாளர்களின் தனியார் மயமாக்கல் கொள்கைகளை தீவிரமாய் எதிர்த்து வாக்குவேட்டையாடிய சந்திரிகா அம்மையார், இன்று நாட்டின் முக்கிய துறைகளையே தனியார் மயமாக்கி வருகின்றார். வெளிநாட்டுக் கம்பனிகளுக்கு அவை தாரை வார்க்கப் படுகின்றன. அன்னிய நாட்டுக் கரங்களின் பிடியில் தீவு மெல்லமெல்ல தன்னை இழந்துவருகின்றது. பொருளாதாரச் சுமையால் மக்கள் துவண்டுபோகின்றனர். வேலையில்லாத் திண்டாட்டம் இளைஞர்களை விரட்டுகின்றது. 1971இல் தோற்றங் கொண்டு அழிக்கப்பட்டு, பின்னர் 1987இல் மீண்டும் தலைதூக்கி மனிதப் படுகொலைகளைச் செய்து, பின் ஓய்ந்து, இப்பொழுது மீண்டும் அவர்கள் தலைதூக்கி வருகின்றார்கள் என, ஜே.வி.பி. யினர் குறித்து சந்திரிகா அம்மையார் அண்மையில் எச்சரித்திருக்கின்றார். இது சிறீலங்கா இன்னொரு நெருக்குதலையும் எதிர்கொள்ளும் நிலையில் இருப்பதைக் குறிக்கின்றது.

இதுதான் தற்போதைய சந்திரிகா அரசின் மாட்சிமை. தேர்தலுக்கு முன்பிருந்த அலங்காரக் கனவுலக வார்த்தைகள் உதிர்ந்து, மொட்டைமரம்போல இந்த ஆட்சி பொட்டல் வெளியில் நிற்கின்றது.

இத்தனைக்கும் காரணம் என்ன? தமிழர்களுக்கு எதிரான யுத்தமே இதற்கெல்லாம் காரணம். தமிழினத்தை அழித்தொழித்து அவர்களது தாயகத்தை கபளீகரம் செய்து, முழுத் தீவையும் பௌத்த–சிங்களப் பேரினவாதத்தின் புனிதப் பிரதேசமாக ஆக்க எத்தனிக்கும் குறுகிய சிந்தனையே இந்த அழிவின் மூல ஊற்றன்றி வேறு ஏதும் இல்லை.

வழிவழியாகத் தொடரும் இன அழிவுக் கொள்கையையே தமது மூலவிசையாகப் போற்றிச் செயற்படுவதுதான் சிங்களத்தில் தலைமைப் பொறுப்பேற்கும் அனைவரினதும் புனிதக் கடமையாக விரிக்கப்பட்டிருக்கின்றது.

> **இதுதான் தற்போதைய சந்திரிகா அரசின் மாட்சிமை. தேர்தலுக்கு முன்பிருந்த அலங்காரக் கனவுலக வார்த்தைகள் உதிர்ந்து, மொட்டைமரம்போல இந்த ஆட்சி பொட்டல் வெளியில் நிற்கின்றது.**

சிறீலங்காவின் அனைத்து வளங்களும் தமிழர்களுக்கெதிரான யுத்தமுனை நோக்கி திருப்பிவிடப்பட்டிருக்கின்றன. பெரும் இழப்புக்களுக்கு மத்தியில் தனது வக்கிரமான இனஅழிப்புக் கொள்கையை அது கைவிடக்காணோம்.

அடுத்தவனின் காணியை கையகப்படுத்த, தன்வீட்டை விற்று வழக்காடுவது என்பது போலாகிவிட்டது சிறீலங்காவின் நிலை. ஆனால் இந்த வழக்கு வெல்லக்கூடியதல்ல. தமிழர்கள் தமது இருப்பிற்காக போராடுகின்றனர். சிங்களவர்களோ இருப்பது போதாதென்று அடுத்தவனின் இருப்பை அழிப்பதற்கு போராடுகின்றனர். இதில் நியாயமே வலியது. அதுவே இறுதியில் வெல்வது.

> **அடுத்தவனின் காணியை கையகப்படுத்த, தன்வீட்டை விற்று வழக்காடுவது என்பது போலாகிவிட்டது சிறீலங்காவின் நிலை. ஆனால் இந்த வழக்கு வெல்லக்கூடியதல்ல. தமிழர்கள் தமது இருப்பிற்காக போராடுகின்றனர். சிங்களவர்களோ இருப்பது போதாதென்று அடுத்தவனின் இருப்பை அழிப்பதற்கு போராடுகின்றனர்.**

சிறீலங்காவின் வரலாற்றில், தெற்காசியாவின் இராணுவ வரலாற்றில் ஒரு சிறப்பிடத்தைப் பிடிக்கும் ஜெயசிக்குறு இராணுவ நடவடிக்கை இன்னும் ஒரு மாதத்தில் ஒருவருடத்தை பூர்த்தி செய்கின்றது. இன்னும் ஒரு வாரத்தில், சிறீலங்காவின் பிரதிப்பாதுகாப்பமைச்சர் ரத்வத்தையின் மற்றுமொரு காலக் கெடுவான தமிழ் சிங்களப் புதுவருடப் பிறப்பான சித்திரை பதின்நான்காம் திகதிக்கு முன்னர் பாதையைத் திறந்துவிடுவோம் என்ற வார்த்தைப் பிதற்றலையும் அது கடந்து செல்ல உள்ளது.

ஆனாலும் அவர்கள் இன்னமும் சரியான பாதைக்கு வருவதாக இல்லை. முற்றும் துறந்து மனிதத்தின் மகிமையை, அன்பை அறநெறியை வாழ்வியலின் பண்பைப் போதிக்கும் புத்தமதத் துறவிகளே, தமிழர்களிற்கு உரிமை வழங்கப் படக்கூடாதென்ற பௌத்த–சிங்கள மேலாதிக்கத்தின் வக்கிரமான கொள்ளையைத் துறக்கத் தயாராக இல்லாதபோது, நாடு அனைத்தையும் இழந்து, நலிந்து கெட்டு நொந்து சேடம் இழுக்கும் இறுதிநிலை வரும்வரை சிங்களத் தலைமை காத்திருப்பது குற்றமில்லைப் போலும். ✳


அன்னையே உன்வழி - எண்ணி நாம் எழுவோம் !
திலீபனின் வழியில் ஒளிதந்த தீபம் !
தமிழீழத் தாகத்தில் புயலான தென்றல் !!

**அன்னை பூபதி அவர்களின் பத்தாவது ஆண்டு நினைவுநாள்**

இடம் :
Festsaal der Rudolf-Steiner-Schule
Slucht Str. 21
42285 Wuppertal

காலம் :
18 . 04 . 98
சனிக்கிழமை
17:00 மணிக்கு

அன்னையை வணங்கி, உன்னதமணப்பெறும் இலட்சியத்துக்குக் கை கொடுக்க யேர்மனி வாழ் அனைத்துத் தமிழ் மக்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

வண.பிதா.கஸ்பர ராஜ் அடிகளாரின் (*வெரிதாஸ் வானொலியின் தமிழ்ப்பணிப் பொறுப்பாளர்*) சிறப்புச் சொற்பொழிவு உட்பட பல கலைநிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன.

கலைபண்பாட்டுக் கழகம்
தமிழீழ விடுதலைப்புலிகள்
யேர்மனிப்பணியகம்

# ஜே. வி. பி. இன் பெயரால் வன்முறைக்குத் தயாராகும் சிறீலங்கா அரசு!

1971ல் நாட்டில் அழிக்கப்பெற்ற ஜே. வி. பி. 1987ல் மீண்டும் தலைதூக்கி மனிதப் படுகொலைகளைச் செய்தது. பின்னர் அவர்களின் அட்டகாசம் ஓய்ந்திருந்தது. இப்பொழுது மீண்டும் அவர்கள் தலைதூக்கி வருகின்றனர் என சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க எச்சரிக்கையாகவுள்ளார். ஜே. வி. பி. குறித்த சந்திரிகாவின் எச்சரிக்கையானது, அவர்களின் நடவடிக்கைகள் அதிகரித்ததோ இல்லையோ சிறிலங்கா அரசியல் களம் விரைவாக வன்முறை நோக்கி விரைந்து கொண்டிருக்கின்றது என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது. 1972லும், 1987 தொடக்கம் ஜே. வி. பி.யின் வன்முறை சிறீலங்கா அரசையே பெரிதும் அச்சுறுத்தலுக்குள்ளாக்கியது என்பது உண்மைதான். இவ் வன்முறை காரணமாக பல ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டமையும் சிறீலங்கா இரத்தம் தோய்ந்ததும் தெரிந்ததுதான். ஆனால், இவ்வன்முறைகளில் கணிசமானவற்றை ஜே. வி. பி. யினர் புரிந்தாலும் அதற்கு ஊன்றுகோலாக இருந்தவை ஆட்சியில் இருந்தவர்களின் நடவடிக்கைகளேயாகும். 1972ல் விலைவாசி வருமானமின்மை என்பனவற்றைத் தொடர்ந்து ஜே. வி. பி.யினர் கிளர்ச்சி தொடங்கக்கூடியதாக இருந்தது. 1987ல் இந்தியா சிறீலங்கா சமாதான உடன்பாடு ஜே. வி. பி.யினர் வன்முறையில் ஈடுபட காரணமாகியது. ஆனால், இக்காலகட்டத்தில் ஜே. வி. பி.யினர்தான் தனியாக வன்முறையில் இறங்கினர் என்றில்லை. ஜே. வி. பிக்கு எதிராக அரசு கட்டவிழ்த்துவிட்ட

> **இவ்வாறான கிளர்ச்சிகள், இருண்ட யுகங்கள் சிறிலங்காவில் தொடரும். ஏனெனில், தமிழ் மக்களுக்கு வன்முறையை ஏற்றுமதி செய்பவர்கள், எப்படி அமைதியை இறக்குமதி செய்ய முடியும்.**

வன்முறையானது, ஜே. வி. பி.யினரின் வன்முறையைவிட அதிகமாக இருந்தது. இவ்வாறு அரசு புரிந்த வன்முறையின் தாக்கமானது, இன்னமும்கூட சிறீலங்காவை விட்டு அகன்றதாகவும் இல்லை. இந்த நிலையில்தான் தற்பொழுது மீண்டும் ஜே. வி. பி.யின் வன்முறை பற்றி அரசு எச்சரிக்கத் தொடங்கியுள்ளது. இது முற்றிலும் உண்மைக்கு மாறானது என்று கூறுவதற்கும் இல்லை. ஏனெனில், இவ்வாண்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் ஜே. வி. பி. போன்ற இயக்கத்தினரை கிளர்ச்சி செய்ய தூண்டுவது தவிர்க்க முடியாத வொன்றாகவே இருக்க முடியும்.

ஆனால், அரசின் எச்சரிக்கையானது, தனியாக ஜே.வி.பி.யினரின் வன்முறை அதிகரிப்பினால் மட்டும் வெளிவந்ததல்ல. அரசு ஜே. வி. பி.யின் பெயரில் வன்முறையில் ஈடுபடத் தயாராகிவிட்டது என்பதன் வெளிப்பாடுமேயாகும். ஏனெனில், இன்று சந்திரிகா அரசுக்கு தனது அதிகாரத்தைத் தக்க வைத்துக் கொள்வதற்கு வன்முறைகளைத் தவிர வேறு மார்க்கம் இருக்கவில்லை. ஏனெனில், அரசினால் தேர்தல் வாக்குறுதிகள் எதனையும் இதுவரை நிறைவு செய்ய முடியவில்லை; நிறைவு செய்யக்கூடிய நிலையிலும் இல்லை. அதேசமயம் அரசு எதிர்பார்த்திருந்த இராணுவ வெற்றிகளும் கிட்டவில்லை. அத்தோடு போரில் வெற்றி கிட்டும் என்ற நம்பிக்கையும் அற்றுப் போய்விட்டது. இந்நிலையில் அரசுக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள், கண்டனங்கள் என்பவற்றை அடக்குவதற்கு வன்முறைகளைத் தவிர, அரசுக்கு வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை. இதனை எதிர்க்கட்சித் தலைவரின் நடவடிக்கை உறுதி செய்வதாக உள்ளது. தமது கட்சியின் மீது அரசு வன்முறையை ஏவியுள்ளதாகக் கூறும் ரணில் விக்கிரமசிங்க, இதனை மக்கள் மத்தியில் கொண்டு செல்ல தொடர் மீண்டும் ஒரு இருண்ட அரசியல் யுகத்துள் சென்று கொண்டிருப்பதையே வெளிக்காட்டுவதாக உள்ளது. ஆனால், சிறிலங்கா அரசியலின் இவ்வாறான

> **1972, 1988களில் ஏற்பட்டது போல் ஜே .வி .பி யின் வன்முறைகள் இவ்வாண்டிலும் சிறிலங்காவில் நடைபெறலாம். இதற்கு பொருளாதார நெருக்கடியும் ஒரு காரணம். ஆனால், அரசு எச்சரிப்பது போல வன்முறை ஜே. வி. பி யினால் மட்டும் ஏற்படப் போவதில்லை. சிறிலங்கா அரசு, ஜே. வி. பி. யின் பெயரில் வன்முறையில் ஈடுபடத் தயாராகிவிட்டது என்பதும் புலப்படுகிறது.**

கூட்டங்களை நடத்தப்போவதாகவும், வெளிநாடுகளுக்கு அறியத் தருவதற்காக வெளிநாட்டு தூதுவர்களை தொடர்ச்சியாக தமது கட்சி சந்தித்துப் பேசப்போவதாகவும் அறிவித்துள்ளார். இந்த வகையில் சிறீலங்காவின் இன்றைய அரசியல் சூழல், அது இருண்ட யுகங்கள் இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு ஒன்றை காணும்வரை தவிர்க்க முடியாததொன்றாகவே இருக்கும். ஏனெனில், வன்முறையை ஏற்றுமதி செய்பவர்கள் எவ்வாறு சமாதானத்தை இறக்குமதி செய்ய முடியும்? ✳

# சிறிலங்காவின் போர் விரிவால் விலைபோகவுள்ள கனிய வளங்கள்

சிறீலங்கா அரசின் முதலீடுகள் வரவர சுருங்கிக் கொண்டே செல்கின்றது. இது நாட்டின் பொருளாதார வளர்ச்சியை மோசமாகப் பாதிக்கலாம் என்ற உலக வங்கியின் உயர் அதிகாரி திரு. ஜோன்ஸ் வில்லியம்சன் அவர்களின் கூற்றுக்கள் யதார்த்தத்தின் பாற்பட்டவையேயாகும். அதாவது, அருகிச் செல்லும் அரச முதலீடுகள் பொருளாதாரத்தை வீழ்வுறச் செல்லும் என்ற தத்துவத்தின் பாற்பட்டதே ஆகும். ஆனால், சிறிலங்கா அரசோ முதலீடுகளை அதிகப் படுத்தக்கூடியதான நிலையில் மட்டுமல்ல தற்போதுள்ள முதலீடுகளைக் கூட பாதுகாக்க முடியாத நிலையிலேயே உள்ளது. இதுபற்றிக் கூறுவதானால் சிறீலங்கா அரசு, உடமைகளை விற்று குடித்து அழியும் நிலையில் உள்ள குடிகாரன் நிலைக்கு ஒப்பானது எனலாம். சிறிலங்கா அரசு போரிற்கான பெரும் செலவீடு செய்யத் தொடங்கியபோதே அதன் முதலீடுகள் பெருமளவு குறையத் தொடங்கிவிட்டன. அதாவது, முதலீடு செய்வதற்கான சக்தி அதற்கு அற்றுப்போய்விட்டது. இராணுவச் செலவீடு பல மடங்கு

> **போர் விரிவடைந்து செல்கையில், சிறீலங்காவின் பொருளாதார நெருக்கடியும் விரிவடைந்து செல்கிறது. இந்நிலையில், அரச நிறுவனங்களை தனியாருக்கு விற்ற நிலைமையைச் சமாளித்த அரசு, அதுவும் போதாமையினால் இன்ற நாட்டின் கனிய வளங்களையும் ஒட்டுமொத்தமாக வெளிநாட்டு நிறுவனங்களுக்கு விற்றுவிட சிறிலங்கா அரசு முனைந்து வருகிறது.**

அதிகரித்ததினால் பொருளாதார அபிவிருத்தி பாதிக்கப்பட்டது மட்டுமல்ல விலைவாசியேற்றம், வேலையில்லாப் பிரச்சனை, பணவீக்கம் உள்ளிட்ட பல பிரச்சனைகளும் தலைதூக்கத் தொடங்கின. மறுவளமாக, இக்காலகட்டத்தில் அரசு முன்வைத்த திறந்த பொருளாதாரக் கொள்கை ஒருவகையில் அரசிக்கு பேருதவி புரியும் ஒன்றாகவே மாறியது. 'தனியார் மயமாக்குதல்' என்ற ரீதியில் எடுக்கப்பட்ட நடவடிக்கையானது, நஸ்டத்தில் இயங்கும் அரச நிறுவனங்களைத் தனியாருக்கு விற்றல்' என்ற ரீதியில் பல அரச நிறுவனங்களை விற்கும் சந்தர்ப்பத்தை அரசுக்கு வழங்கியது. இது அரசுக்கு ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளை சற்றுத் தணிக்கவும் உதவி செய்தது. ஆனால், போர் விரிவடைந்து சென்றது போன்று பொருளாதார நெருக்கடியும் விரிவடைந்தே சென்றது. இந்நிலையில் நஸ்டத்தில் இயங்கிய நிறுவனங்கள் மட்டுமல்ல, இலாபத்தில் இயங்கிய நிறுவனங்களையும் விற்பனை செய்யும் முயற்சியில் இறங்கியுள்ளது. இதற்குப் பலதரப்பட்ட எதிர்ப்பு இருந்த போதும் அரச தரப்பு அதனைக் கண்டு கொள்ளவில்லை. மாறாக, நிறுவனங்களை மட்டுமல்ல நாட்டில் காணப்படும் கனிய வளங்களையும் ஒட்டுமொத்தமாக விற்றுவிடும் முயற்சியிலும் இறங்கியுள்ளது. இதன்

> **போரை சிறிலங்கா அரசு நீடிக்கும் வரைக்கும் அது எவற்றை விற்றாலும் சிறிலங்காவின் பொருளாதார நெருக்கடி தீரப்போவதில்லை. ஏனெனில், அரச செலவீட்டை குறைக்க, போருக்கு செலவிடும் தொகையைக் குறைப்பதற்குப் பதிலாக, அரச உத்தியோகத்தர்களை வேலை நீக்கம் செய்யும் மனப்பான்மையில் உள்ள அரசு நாட்டை எப்படி சீர்படுத்த முனையும்?**

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....

www.tamilarangam.net

மட்டு நகரிலே
மாமாங்க வீதியிலே
அன்னை பூபதி தவமிருந்தாள்
தமிழர் தம் வாழ்வுக்காய்
தலை நிமிர்ந்து நிற்பதற்காய்
உண்ணா நோன்பினிலே
போர் புரிந்தாள்
தன்னை கரைத்தே
ஆகுதியானாள்

# அன்னை பூபதியின்

வடிவமானாள். என் இனம் அமைதி வாழ்வு பெற வேண்டும் என்ற கோரிக்கை தான் அந்தத் தாயின் வேதமாகியது. என் தமிழீழ மண்ணில் போர் நிறுத்தப்பட வேண்டும் என்ற பேச்சைக் கேட்க மறுத்த அன்றைய

இந்திய சாத்வீகப் போராளிகளைச் சிறைதான் செய்தது என்றால், அதனை எதிர்த்து சாத்வீகத்திற்காக – சத்தியத்திற்காக உலகின் மனச் சாட்சியின் நரம்புகளைத் தட்டி எழுப்பிய அதே இந்தியாவின் 1989ஆம் ஆண்டு ஆட்சியாளர்கள், தாம் சுதந்திரம் பெற்று 40 ஆண்டுகள்

மெங்கும், தமிழீழ மக்களுக்கு தமிழீழத் தேசத்திற்கும் அன்பையு சேவையையும் வெளிப்படுத்து செயற்திட்டக் காலமாக தமிழீ மக்களால் கடைப்பிடிக்கப்பட் வருகிறது.

இக்கால கட்டத்தில் பள்ளிச் சிறுவர்க மனதில் தேச பக்தியை வளர்க்கு சிந்தனைகள், தேச சேவைக்கா அர்ப்பணிப்பை ஊக்குவிக்கு செயற்திட்டங்கள் நடாத்தப்படுகின்றன சிரமதானங்கள், மக்கள் நலன் பேணு செயற்பாடுகள், தமிழீழத் தேசம் பற்றி அறிவை ஆர்வத்தை ஊக்குவிக்கு அறிவுப் போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், இனமான உணர்வை பிறர் நலன் பேணும் பண்பை வளர்க்கும் விழிப்புணர்வுக் கூட்டங்க என்பன தமிழீழத் தேசமெங்கும் இந் ஒரு மாத செயற்திட்டக் காலத்தில் நடாத்தப்படுவது வழமை.

மக்களும் தம் நல்வாழ்வுக்காய் தமிழினப் பெருவாழ்வுக்காய் இன்னு யிரையே தந்த பெரு மூதாட்டி அன்னை பூபதியின் மேலுள்ள அன்பின் வெளிப்பாடாக வீதிகள் தோறும் அன்னையின் திருவுருவம் அமைத்து மகர தோரண மரியாதைகள் செய்தும் அணையா விளக்கு ஏற்றியும் தமிழீழத் தேசத்தையே திருவிழாக் கோலம் கொள்ள வைத்து வருவது, தமிழீழ மக்களின் கலாச்சாரமாக மாறிவிட்டது.

## சத்தியத்திற்காகச் சாவைச் சந்தித்த எங்கள் தமிழ்த் தாய் அன்னை பூபதி

*தன் இனம் அமைதியாக வாழ தன் உயிரையே ஆயுதமாக வைத்துப் போராடிய அன்னையின் 10வது ஆண்டு*

சத்தியம் சாகாது! கேட்டதுண்டு – படித்ததுண்டு. தியாகி தீலிபனின் தியாக




மரணத்தில் அனுபவமாகக் கண்டது தமிழீழம். அதன் தொடர்நிலையாகத் தென் தமிழீழத்தில் தமிழ்த் தாய் – தமிழீழ வீரத்தாய் அன்னை பூபதி கணபதிப்பிள்ளையின் தியாக மரணத்தின் போது (19–04–88)



தமிழீழம் துடித்தது. அந்தத் தமிழீழத் தாய் தன் ஐம்பத்தெட்டு வயதில் தமிழீழ மக்களின் உறுதியின்

இந்திய அரசுக்கு முன்பாக, காந்தியின் உண்ணாவிரதப் போரை முன் வைத்தாள் அன்னை பூபதி. 19–03–1988இல் அன்னை பூபதி உண்ணா விரதப் போராட்டம் ஆரம்பமாகியது. தியாகி திலீபனின் சாத்வீகப் போரை தனது வழியாக்கி, சாத்வீகத்திற்கு

கதவடைப்புச் செய்த அன்றைய இந்திய அரசின் நெஞ்சிலே, ஒரு பெண்ணின் உறுதி கனிவை ஏற்படுத்துமென யாருமே எதிர் பார்க்கவில்லைத்தான். ஆயினும், அன்னை பூபதியோ மாறுகின்ற ஆட்சியாளரிடம் அல்ல, மாறாத சத்தியத்திடமே தமிழீழ மக்களின் போர்க் கொடுமைகளுக்கு நீதி கேட்டாள். சத்தியம் சாகாது என்ற செந்தமிழர் நம்பிக்கை மேல் அவள் மீண்டும் உறுதி கொண்டாள். முப்பது நாட்கள் அன்னை அசையா மனதினளாய், தமிழீழ இனத்திற்கு அமைதி வாழ்வு கேட்டு போர் நிறுத்தம் வேண்டி உணவும் நீரும் மறுத்து தெய்வீகப் பூசை செய்தாள்.

ஆனாலும் அடக்கு முறையாளர்கள் காந்தீயத்தையோ, சத்தியத்தையோ ஏறெடுத்தும் பார்க்க மறுத்தனர். மாறாக, இந்தியாவில் பிரித்தானிய ஆக்கிரமிப்பின்போது,

முடிவதற்கிடையில் பிரித்தானிய காலனித்துவம் செய்ததைவிட மோசமான கொடுமையாக, சாத்வீக போராளிகளின் மரணத்தில் மகிழ்ந்தது.

தியாகி திலீபன் மக்களுக்காக மரணிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன் என்று சாவையும் சந்ததிக்காக ஏற்று சரித்திரம் படைத்தான். அவன் வழியில் சாவிலும் என் சந்ததியின் அமைதி வாழ்வுக்கு குரல் கொடுத்தே சாகிறேன் என அன்னை பூபதி 19-04 1988ல் தன் உயிரினை அர்ப்பணித்தாள்.

தமிழீழத் தாய்க் குலத்தின் எழுச்சி வடிவமாக அன்னை மாறினாள். அவரது தியாகம் தமிழீழ விடுதலை வரலாற்றில் மகத்தான உன்னதங்களில் ஒன்றாக உலக வரலாற்றில் இடம்பெற்று நிற்கிறது. அகிம்சைப் போரின் முதல் பெண் சாவாகவும் அன்னையின் இறப்பு உலக வரலாற்றில் நிலைபெற்றது.

இதனாலேயே அன்னை பூபதியின் வீரச்சாவு நிகழ்ந்த தினமான சித்திரை பத்தொன்பதை தமிழீழத் தேசியத் தலைவர், தமிழீழத்தின் விசேட நாளாக அறிவிக்கப்பட்டு, அன்று முதல் எழுச்சிகரமாக தமிழீழ மக்களால் நினைவு கூரப்பட்டு வருகிறது. அது மட்டுமல்ல, ஒவ்வொரு ஆண்டும் அன்னை பூபதி உண்ணாநோன்பினை ஆரம்பித்த பங்குனி 19 முதல் அன்னை வீரச்சாவடைந்த சித்திரை 19




வரையிலான காலப்பகுதி தமிழீழ வந்த சாதாரண வாழ்க்கையைத்

*அன்னையின் வரலாற்று முக்கியத்துவம், தொடர்பாக தேசியத் தலைவர் அவர்களின் (19.04.90) உரையிலிருந்து.....!*

### அன்னை பூபதி தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவம்

எமது புனித விடுதலைப் போராட்டத்தின் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக, வாழ்ந்து

www.tamilarangam.net

# பத்தாம் ஆண்டு நினைவாக....

துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து, தனது சமூகத்தின் சுபீட்சத்துக்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது, உலக

**ஆண்டுகள் கோடி சென்று மறைந்தாலும்**
**பூபதி அம்மா உன் நினைவுகள் அழியாது வாழும்**

வரலாற்றிலேயே புதுமையானது. இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்தீய தேசத்தைத் தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை, தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளைச் சந்தித்து, எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு, எத்தனையோ திருப்புமுனைகளுக்கு முகங்கொடுத்து, வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டு வருகிறது. வரலாற்று ரீதியாகப் பார்க்கும் பொழுது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால், மிகவும் ஆபத்தானதென்றால் அது இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்தியத் தலையீடானது எமது சுதந்திரப் போராட்டத்திற்கு எதிராக எழுந்த மிகப் பெரிய சவாலாக அமைந்தது. முதன் முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவத் தலையீட்டைச் சந்தித்தோம். ஒரு அந்நிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையைச் சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்டபோது, எமது மக்கள் மீது ஒரு முழு அளவிலான போர் ஏவி விடப்பட்டபோது, எமக்காக குரல் கொடுக்கவோ அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த ஒரு உலக நாடும் முன்வரவில்லை. உலக வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இந்தியத் தலையீட்டை ஆதரித்து நின்றன. ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய சிங்கள அரசும் இந்தியாவுடன் இணைந்து செயற்பட்டது. எமது சகோதர இயக்கங்களும் எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்குத் துணைபோயின.

நாம் தனித்து நின்று இந்தியத் தலையீட்டை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று உலகின் மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம். நாம் தனித்து நின்று எமது தேசிய சுதந்திரத் தீயை அணைய விடாது போராடினோம். இறுதியில் நாம் வெற்றி கண்டோம். இந்த வெற்றிக்குக் காரணம் எமது மனம் தளராத உறுதி, சாவுக்கும் அஞ்சாத எமது வீரம், சத்தியத்திலும் தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை.

தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்களின் இவ் உரை நிகழ்த்தப்பட்டு இன்று எட்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆனால் இந்த நீண்ட எட்டு ஆண்டுகளிலும் அன்னையின் சாத்வீக மரணத்திற்கு பரிகாரம் செய்யக்கூடிய தன்மைக்கு இந்திய மத்திய அரசு வரவில்லை. ஆனால், தற்பொழுது ஏற்பட்டுள்ள ஆட்சி மாற்றங்கள் இந்திய அரசியலில் புதிய விழிப்புணர்வுகளைத் தோற்றுவித்துள்ளன. இக்கால கட்டத்தில் அன்னை பூபதியின் பத்தாவது ஆண்டாகவும் இவ் ஆண்டு அமைகின்றது. இந்நேரத்தில் அன்னை பூபதியின் ஆசைகளுக்கு மதிப்பளிக்கும்படி இன்றைய இந்திய அரசை தமிழர்கள் அனைவரும் கேட்க வேண்டிய நேரம் இது. கூட்டாட்சி நேரங்களிலேயே ஜனநாயகம் சிறப்பு பெறுகிறது என்பது சில அரசியல் அறிஞர்களின் கருத்து.




ஏனெனில், இக் காலகட்டத்திலேயே மக்கள் குரலுக்கு மதிப்பளிக்கப்படுவது வழமை. ஆகவே, இந்த நேரத்தில் அன்னையின் ஆசை தமிழீழ மக்களின் அமைதி வாழ்வு கைகூட அனைவரும் ஒன்றாகக் குரல் கொடுக்க வேண்டும். ✳

*சு. பற்றிமாகரன்*

## பூபதி அம்மா ஒரு புயல்



அந்தத் திரை
அன்பு அறநெறி அமைதி என்றோதும்
குறுகும் சிந்தனையை கொண்ட பெரு நரிதன்
உள்ளம் மறைத்து, உலகை ஏய்க்க
உடலில் அணிந்த கவர்ச்சித் திரை
அமைதித்திரை!
பிளந்தது பூபதியம்மாவின் உயிரைப்போல்.

எம்மை அழுத்திய அந்தத் திரையுள்
அமிழ்ந்து கிடந்தோம்.
மூச்சுத்திணற, கண்கள் மிரள
நா வறண்டது.
தொண்டைக்குழியின் ஈரம்வற்றி
குரல் மெலிந்தது.
காதுகள் அடைக்க, கண்கள் இருள
காத்துக் கிடந்தோம்.
"மின்னல்த் தெறிப்பு"
"பேரிடி ஒலிப்பு"
எதிரியைப் போலவே, எம்முள்ளும் நடுக்கம்
"பூபதி அம்மா" இழந்தாவிட்டோம்?

அமைதித் திரையோ அகலக்கிழிந்தது.
ஒளி தெறித்தது. கண்கள்கூச உலகைப் பார்த்தோம்.
உலகம்கூட, அமைதித்திரையுள் நாங்கள் பட்ட சோகம்
அறிந்தது.

ஐம்பத்திஆறு வயது,
பிள்ளையை நினைத்தாளா?
பிள்ளையின் பிள்ளையை, பேரனை நினைத்தாளா?
கொஞ்சிச் சோறூட்டி தாலாட்ட நினைத்தாளா?
கொண்டவனை விட்டுப் பிரிகின்ற கணங்களைத்தான்
நினைத்தாளா?
யாவும் மறந்தாள்!
ஆயுதம் ஏந்திப் பழகா அவளின்
"உயிரே ஆயுதம்"

"அமைதித்திரை பிளந்தது,
பூபதி அம்மாவின் உயிரைப்போல்"

–ஜெயா–

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபத்தியிரண்டு

(தொடர்ச்சி)

**லியோன் யூரிஸ்**

இந்த யூத சேரிகளில் புதுமையான விடயமொன்று நிகழ்ந்தது. மெதுவாகச் சீரழிவதற்குப் பதிலாக, யூதர்களது விசுவாசமும், கலாசாரமும் ஆழமாக வேரூன்றியது மட்டுமல்லாமல், அவர்கள் பல்கிப் பெருகினார்கள். வெளியுலகத்தில் இருந்து பலவந்தமாகப் பிரித்து வைக்கப்பட்டிருந்ததால், வழிகாட்டலுக்கு மோசேசின் வழிகளை நாடினார்கள். ஆகவே, இந்த விதிகள் அவர்களிடையே ஒரு பலமான இணைப்புப் பாலமாக விளங்கின. சேரிகளுக்குள்ளே அவர்கள் தங்களைத் தாங்களே நிர்வகித்துக் கொண்டு வந்ததோடு, நெருக்கமான குடும்ப சமூகப் பிணைப்புகளை ஏற்படுத்திக் கொண்டார்கள். இந்தப் பிணைப்புகள் சேரிகள் சட்ட விரோதமாக்கப்பட்டதன் பின்பும் தொடர்ந்தன.

போலந்தின் ஆட்சியாளர்களுக்கோ, சேரிகள், யூதர்களின் பிரச்சினை எப்படித் தீர்க்கப்பட வேண்டும் என்பதற்கு ஒரு பகுதி விடையாகவே விளங்கின. யூதர்கள் நிலங்களைச் சொந்தமாக வைத்திருக்கச் சட்டத்தின் மூலம் தடுக்கப்பட்டிருந்தனர். அத்தோடு பொருளாதார ரீதியாகப் போட்டியாயிருக்கக் கூடிய தொழில்களிலோ, கைத்தொழில்களிலோ ஈடுபட முடியாதவாறு தடுக்கப்பட்டிருந்தனர். யூத சேரிகளில் அடைக்கப்பட்டிருந்த யூதர்கள், போலந்தில் ஏற்படும் எந்த நாசத்துக்கும் காரணமானவர்களாகப் பலிக்கடாக்களாக்கப்பட்டனர். முறைக்கு முறை, குருட்டுத்தனமான வெறுப்பால் நிரப்பப்பட்டு, பயத்தினால் உந்தப்பட்ட சனக்கூட்டம் சேரிக்குள் புகுந்து யூதர்களைக் கொன்று, சவுக்காலடித்து, அவர்கள் வீடுகளையும், பொருட்களையும் நொருக்கியடித்தது.

இப்படியாக தொடர்ந்து நடந்ததால் யூதர்களை அடிப்பது மரியாதைக்குரிய செயலாகக் கணிக்கப்படாமல் இருந்தாலும், ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு போலந்துப் பொழுது போக்காயிற்று. நான்கு நூற்றாண்டாக நடந்து வந்த யூதர்களை அடித்தல், 1648இல் உச்சக் கட்டத்தை அடைந்தது. கொசாக்கு (Cossack) களின் எழுச்சியின்போது ஐந்து இலட்சம் யூதர்கள் கொலை செய்யப்பட்டனர். இந்தக் கொலைகளின் தீவிரம், பச்சைக் குழந்தைகளை உயிரோடு குழிகளில் வீசிப் புதைக் குமளவிற்கு இருந்தது.


மேற்கைரோப்பாவில் முடிவுக்கு வந்து கொண்டிருந்த இருண்ட நாட்கள், வார்சோவின் சேரிகளில் தொற்றிக் கொண்டிருந்தது. 1648இன் துயர நிகழ்வுகளும் நூற்றுக்கணக்கான வருடங்களாகத் தொடர்ந்து அனுபவித்த துன்பங்களும், யூதசேரிகளில் அவர்களிடையே புதுமையான நிகழ்வுகளை நிகழ்த்தின.

யூதர்களின் நீண்ட சரித்திரத்தில், நிகழ்வுகள், எதிர்பார்ப்புகள் சிதைவடைந்து நம்பிக்கையிழக்கும் நேரங்களில், அவர்களுக்குள்ளேயிருந்த சுயவிளம்பர, "இரட்சகர்கள்" தோன்றுவார்கள். 1648இன் இருண்ட காலப் பகுதியின் பின்கூட "புதிய இரட்சகர்கள் குழுவொன்று" முன் வந்தது. ஒவ்வொருவரும் இசையாசின் தீர்க்கதரிசனங்களை நிறைவேற்றவே தாங்கள் முன்வந்திருப்பதாகக் கூறினார்கள். ஒவ்வொருவருக்கும் நிறைய சீடர்கள் இருந்தார்கள்.

இந்த இரட்சகர்களோடு, பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து நடக்கும் துன்பங்களுக்கு பைபிள் ரீதியான காரண காரியங்களை தேடும் பணிக்கு அர்ப்பணிப்புள்ள யூத இறை தொடர்பாளர்களும் (Jewish Mystics) தோன்றினார்கள். மீட்சிக்கான தங்கள் தவிப்பினால் இவ்வகை இறைதொடர்பாளர்கள் பைபிள் நிகழ்வுகளுக்குச் சற்றும் பொருத்தமில்லாத பயங்கரமான விளக்கங்களை, இறைதொடர்பு, எண்சாஸ்திரம், தங்கள் சுயசிந்தனைகள் ஆகியவற்றை அடிப்படையாக வைத்து வழங்கி வந்தார்கள். கபாலா (Capala) என வழங்கப்பட்ட, மக்களை ஈடுபடுத்தும் ஒரு முறைமூலம், கடவுளை வேண்டி சாவின் நிழலிலிருந்து தங்களை மீட்டுச் செல்ல வழி தேடிக் கொண்டிருந்தார்கள்.

இரட்சகர்கள் தங்களைத் தாங்களே பிரகடனப்படுத்திக் கொண்டும், கபாலிஸ்டுகள் மறைந்திருக்கும் கருத்துக்களைத் தேடிக்கொண்டும் இருந்தபோது மூன்றாவதாக ஒரு பிரிவினர் தோன்றினர். ஹாசிடிம் (Hasidim) என வழங்கப்பட்ட இவர்கள், சாதாரண வாழ்க்கையின் கஷ்ட நஷ்டங்களில் இருந்து விலகி பைபிளைப் பயிலுவதிலும், செபதபத்தில் கழிப்பதிலும் மட்டும் ஈடுபட்டனர். செபதபங்களில் தங்களை மூழ்கடிப்பதன் மூலம் நிஜ வாழ்க்கையில் நிகழ்ந்த துன்பங்களில் இருந்து விலகி, மதரீதியான பேரின்பத்தில் திளைத்திருந்தனர்.

இரட்சகர்கள் – கபலிஸ்டுகள் – ஹாசிடிம் எல்லோருமே நம்பிக்கைகளை இழந்த நிலையின் தவிப்பில் உருவெடுத்தவர்கள்.



மெண்டல் லண்டவ்வுக்கு இவையெல்லாம் தெரியும். சுமைகள் குறைந்து. சட்டதிட்டங்கள் தளர்த்தப்படும் வேளைகளில் குதூகலம் மேலெழும்பும். போலந்துடைய சொந்தச் சரித்திரமே இரத்த வெள்ளத்தில் மூழ்கியதொன்றாகும். போலந்துக் காரர்கள், தொடர்ச்சியான போர்கள், புரட்சிகள், அதிகார விளையாட்டுகள் ஊடாகத் தங்கள் இறைமைக்காகப் போராடிவந்தார்கள். போலந்தின் எல்லைகள் பல தடவைகள் சிதைக்கப்பட்டன. எப்போதுமே ஒரு படையெடுப்பு அல்லது வரவிருக்கும் படையெடுப்பைப் பற்றிய பயம் இருந்தது. இந்தப் போராட்டங்களில் யூதர்கள் தங்கள் நலனைப்பற்றிக் கவலைப்படாமல் தாங்கள் சார்ந்திருந்த இனத்தின் நலன்களைக் காப்பாற்றப் போலந்துக் காரர்களோடு தோளோடு தோள் நின்றார்கள்.

மென்டல் லன்டவ்வுக்கு தெரிந்தவைகளில் அதிகமானவை இப்போ புராதன சரித்திர நிகழ்வுகளாகி விட்டன. 1939ஆம் ஆண்டு – போலந்து அப்போது ஒரு குடியரசாக விளங்கியது. அப்போது அவனும் அவனது குடும்பத்தினரும் சேரிகளில் வாழ்ந்து கொண்டிருக்கவில்லை. 30 இலட்சம் பேருக்கு அதிகமான தொகையினராக வாழ்ந்து கொண்டிருந்த யூதர்கள் தேசிய வாழ்வின் முக்கிய அங்கமாக விளங்கினர்.

அடக்கப்படுதல் குடியரசை நிறுவிய பின்னரும் நிற்கவில்லை. அளவுகளில் தான் மாற்றம் இருந்தது. சமனற்ற வரிவிதிப்பு இன்னமும் இருந்தது. பொருளாதார கழுத்து நெரிப்புகள் இன்னமும் இருந்தன. வெள்ளம் வந்தபோதும் வரட்சி நிலவியபோதும், அவைக்கு யூதர்களே காரணம் என போலந்துக்காரர்கள் குற்றம் சாட்டினார்கள். சேரிகள் இல்லாதொழிக்கப்பட்டாலும், மென்டல் லன்டவ்வுக்கு வாழும் இடங்கள் எல்லாம் சேரியைப் போலவேயிருந்தது. அது ஒரு குடியரசுதான். ஆனால், மென்டல், பல இன அழிப்புகளை யூத எதிர் கலவரங்கள் போன்றவற்றை, பிறெசெஸ்க், செஸ்ரோசோவா, பிறிசிரிக், மின்ஸ்க், மஸோவீகி ஆகிய நகரங்களில் அனுபவித்திருந்தார்.

தொடரும்...

இழப்பதற்கு எதுவுமில்லை..! இருப்பதற்கு இனிய நாடு ஒன்று போதும் என்ற உணர்வோடு ஒரு கையில் துப்பாக்கி! மறுகையில் மண்வெட்டி! ஊனின்றி, உறக்கமின்றி, வியர்வையையும், இரத்தத்தையும் விலையாகக் கொடுத்து விலைமதிப்பில்லாத் தங்கள் தாயகத்தை யூதமக்கள் மீட்டெடுக்கின்றார்கள்.

**வாசகர் கவனத்திற்கு !**

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள தலைப்பிற்குப் பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் உங்கள் சிந்தனையில் எழும் கருத்துக்களை கவிதை வடிவில் தாருங்கள். உங்கள் ஆக்கங்களை **08 - 05 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.

# இடர் மாறும்...

கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# சிறுகதை

மத்தியான வெய்யில் நெருப்பாய் கொழுத்திக் கொண்டிருக்குது. தார்ரோட்டிலே கால்வச்ச உடனேயே நான் துடிச்சுப்போறன். இந்த வெய்யிலுக்கு ள்ளாலை நடந்துபோய் பேத்தியைப் பார்க்கவேணுமோ எண்டு நினைச்சுக் கொண்டு நான் படலையடியிலை பேசாமல் இருக்கிறன்.

இந்த வெய்யிலைப் பாக்கேக்கை எனக்கு என்ரை பேத்தியின்ரை ஞாபகம் வருகுது. இப்பிடி எத்தினை வெயிலுக்கை காஞ்சு காஞ்சு அவளும் போராடுகிறாள் எண்டதை யோசிச்சுப் பாக்கேக்கை இது பெரிய வெயிலோ எண்டு நான் நினைக்கிறன்.

வெத்திலையை வாய்க்குள்ளை போட்டுக் குதப்பிக்கொண்டு, கூன்விழுந்த முதுகை இன்னும் நல்லாய்க் கூனிக்கொண்டு நான் எழும்பி தெருவிலை நடக்கிறன்.

என்னை விலத்திக்கொண்டு சைக்கிள் களும், வாகனங்களும் போய் வருது. மாட்டு வண்டியிலை விறகுகொண்டு போறமாதிரி சைக்கிள்ளை விறகு கட்டிக்கொண்டு போறவையாலை தெரு பெரிசாய் அமர்க்களப்படுது. சுமையை மறக்க தெருவிலை கும்மாளம் போடுகினம்போலை.

திருவிழாவுக்கு நிறைமிற மாதிரி சனம் நிறைஞ்சு போயிருக்கிற இந்த தெருவைப் பாக்கேக்கை, முந்தி இந்தத் தெரு இருந்த நிலை எனக்கு ஞாபகம் வருது. பஸ், ரெயின் ஓடுற காலத்திலை இந்தத் தெருவை, இதுக்கு அங்கா லையும் இஞ்சாலையும் பரந்து கிடக்கிற பெரிய வெளியை, உந்தப் பனை மரங்களை அப்ப ஒருத்தருக்கும் தெரியாது. உந்த வெளிக்குள்ளை உப்பு விளையுற காலத்திலை உப்பு அள்ள வாறவையாலைதான் எப்பாவது இந்தத் தெரு நிறைஞ்சுபோகும். இப்ப உள்ள வாகனமெல்லாம் இந்த தெருவிலைதான் ஓடுற மாதிரிக் கிடக்கு. தெருவாலை போறவாற ஒவ்வொருத்தருக்கும் தெருவிலை கிடக்கிற ஒவ்வொரு பள்ளமும் இப்ப மனப்பாடம் மாதிரி.

நான் கனதூரம் நடந்து வந்திட்டன். கால் இரண்டும் சோர்ந்துபோனது



மாதிரித் தொங்க, இந்த புளியமரத்துக்குக் கீழை ஆறுதலாய் இருக்கிறன். கால் இரண்டையும் தடவிவிட்டுக்கொண்டு தெருக்கரை யோடை நிக்கிற இந்தப் பெரிய புளியமரத்தை நான் வடிவாய்ப் பார்க்கிறன்.

முந்தி முத்தர் அம்மான்ரை மூத்தவன் இந்த மரத்திலை தூக்குப்போட்டுச் செத்தபிறகு ஒருத்தரும் இந்த மரத்துக்குக் கிட்ட வாறதில்லை. அவனின்ரை ஆவி இதிலை சுத்திக் கொண்டிருக்கும் எண்டு பயம். இப்ப இந்த மரத்துக்குக் கீழை அடுத்த பக்கத்திலை சின்னராசன்ரை தேத்தண்ணிக் கடை சனத்தாலை நிரம்பி வழிமிறது எனக்குத் தெரியுது.

இந்தியன் ஆமி வாகனங் களிலை ஓடித் திரியேக்கை பேத்தியும் அவளின்ரை ஆக்களும் இந்த மரத்துக்கு மேலை ஒளிச்சு, ஒருநாள் முழுக்க ஏறியிருந்தது எனக்கு ஞாபகம் வருகுது. அண்டைக்கு பேத்தி இதை சாதாரணமாய் சொல்லேக்கை நான் நடுங்கிப்போனேன்.

'உந்த மரத்திலை யோ.....முத்தர் அம்மான்ரை மூத்தவன்ரை ஆவி சுத்துற மரத்திலையோ?' எண்டு நான் பயந்து கொண்டு கேக்கை க்கை, பேத்தி அடக்கமாட்டாமல் விழுந்து விழுந்து சிரிச்சது எனக்கு இப்பவும் கண்ணுக்கை தெரியுது.

பேத்தியை, அவளின்ரை நடை முறையைப் பாக்கேக்கை எனக்கு மூக்கிலை விரலை வைக்கவேணும் போலை கிடக்கு. சண்டையைப்பற்றி, தங்கடை வாழ்க்கையைப் பற்றி அவள் கதை கதையாய் சொல்லேக்கை, 'இது என்ரை பேத்திதானா?' எண்டு நான் ஆச்சரியப்பட்டுப்போறன். எனக்கு அவள் புத்தி சொல்லேக்கை. ஒவ்வொரு விசயத்துக்கும் வழிகாட்டேக்கை, 'இவளுக்குத்தானோ நான் தலை இழுத்து, பொட்டுப்போட்டு வடிவு பாத்தன்' எண்டு நான் திகைச்சுப் போறன்.

அந்தக் காலத்திலை பேத்தியின்ரை வயசிலை நானெல்லாம் என்னத்தைச் சாதிச்சுப் போட்டன்?

வீட்டுக்கை இருந்து பிள்ளையளைப் பெத்து, சமைச்சுப் போட்டதைத் தவிர வேறை என்னத்தை சாதிச்சன்? பேத்திக்கு முன்னாலை நாமெல்லாம் வெறும் தூசெண்டு நினைச்சுக்கொண்டு நான் பெருமூச்சு விடுறன்.

பெரிய இரைச்சலோடை வந்த ஒரு வாகனம் என்னை விலத்திக்கொண்டு போகுது. அந்த வாகனத்தின்ரை புகை என்ரை முகத்திலை அடிக்க, நான் விலத்தி இருக்கிறன்.



இந்த புளியமரத்துக்குக் கீழை காலை இரண்டையும் நீட்டி ஆறுதலாய் இருந்துகொண்டு தூரத்திலை வாற வாகனங்களை நான் பாத்துக் கொண்டிருக்குறன். மண்ணெண்ணைப் புகையைக் கக்கிக்கொண்டு போற வாகனங்களையும், விறகுகளோடை போற சைக்கிள்களையும், விறகில்லாமல் வாற சைக்கிள்களையும் பார்த்துக் கொண்டி ருந்த நான் ஒருக்கா திடுக்கிட்டுப் போறன்.

ஒருத்தன் சைக்கிள் ஓடிவாறான். எல்லோரும் ஒரு பக்கமாய், நேராய் ஓடிவரேக்கை அவன் மட்டும் அங்காலையும் இஞ்சாலையும் வளைஞ்சு வளைஞ்சு ஓடிவாறான். அந்தச் சைக்கிளோட்டத்தைப் பாக்க எனக்கு ஆத்திரம் வருகுது.

நடுரோட்டிலை இப்பிடியோ சைக்கிளை ஓடுறது எண்டு நான் நினைக்கிறன்.

நான் பார்த்துக்கொண்டிருக்கேக்கு ள்ளேயே அந்த சைக்கிள்காரன் சினிமாப் படங்களிலை வாற மாதிரி அந்தப் பக்கம் போறதும், இந்தப் பக்கம் வாறதுமாய் ஓடிக்கொண்டு வாறான். நான் நல்லாய் அவனையே உத்துப் பார்த்துக் கொண்டிருக்கிறன்.

அவனுக்குப் பின்னாலை இப்ப எனக்கு ஒரு நீலச்சட்டை தெரியுது. அந்த நீலச்சட்டை போட்டவள் அவனுக்குப் பின்னாலை சைக்கி ளோடு வாறாள். அவள் சைக்கிளை வேகமாக மிதிக்க அவனும் விடாமல் வேகமாய் ஓடுகிறான். அவள் மெதுவாய் ஓட அவனும் சட்டென்று பிறேக் பிடிச்சு மெதுவாய் ஓடுறான்.

ஓ.... எனக்கு இப்பதான் விசயம் விளங்குது.

என்ரை பேத்தி அடிக்கடி சொல்லுற மாதிரி நடுத்தெருவிலை பட்டப் பகல்லை ஒரு மானபங்கம் நடக்குது.

அவள் சைக்கிள் ஓடி ஓடி பின்னாலை திரும்பி அவளைப் பார்த்து என்னவோ சொல்லிச் சிரிக்கிறான். அவள் பயந்து போய் கண்ணை உருட்டி, உருட்டி அங்காலையும் இஞ்சாலையும் பாத்துக் கொண்டு, என்ன செய்யுறதெண்டு தெரியாமல் தவிச்சு போறாள். பூனைக்கு விளையாட்டு, சுண்டெலிக்கு சீவன் போகுது. எல்லாத்தையும் பாத்துக் கொண்டிருந்த எனக்கு புண்ணிலை புளி பத்தின மாதிரி ஆத்திரம் உச்சிக்கு ஏறுது. அந்தக் காலத்திலை தண்ணி எடுக்குறதுக்கு நான் குடம் கொண்டு போகேக்கை வடிவேலற்றை கடைசிப் பொடியன் பின்னாலை வந்து காதுக்கை எம்.ஜி. ஆற்றை காதற்பாட்டைப் பாடிப்போட்டுப் போவரன்.

அப்ப எனக்கு ஆத்திரம் வரும். கையிலை கிடக்கிற குடத்தைத் தூக்கி அவனுக்கு எறிய வேணும்போலை கிடக்கும். ஆனால் நான் ஒண்டும் பேசயாட்டன். வீட்டுக்குள்ளாலை வெளிக்கிட்டுத் தெரியாக் காலத்திலை, ஊர் உலகம் புரியாத காலத்திலை நான் பேசாமல் போனன் எண்டால், இப்பவும் பேசாமல் போறதோ? இது பேத்தியின்ரை காலமெல்லோ....?

தெருவாலை போறவாறவை அவன் அவளை வெருட்டுறைதையும், அவள் பயந்து சாகிறதையும் பார்த்துக்கொண்டு எல்லாருமே பேசாமல் போகினம்.

என்னாலை மட்டும் இந்தப் புளிய மரத்துக்குக் கீழை கையைக் கட்டிக்கொண்டு, இவன் துரத்து றதையும், அவள் துடிச்சுப் போறதையும் பாத்து ரசிச்சுக்கொண்டிருக்க முடி யேல்லை.

என்ரை பேத்தியெண்டால் உதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருப்பாளோ? உந்தச் சேத்துக்குள்ளை அவனைத் தூக்கிப் போட்டுக் குளிப்பாட்ட மாட்டாளோ?

நானும் எல்லாரையும் போலை பேசாமல் பார்த்துக்கொண்டிருந்தன் எண்டால், அந்தப் பேத்திக்கு நான் ஆச்சியாய் இருக்கிறதிலை அர்த்தமில்லையெல்லோ?

நான் எழும்புறன். விறுவிறெண்டு ஓடிப்போய் அவன்ரை சைக்கிளை இறுக்கிப் பிடிக்கிறன். அவன் திகைச்சுப் போறான்.

கூன் விழுந்து தடதடத்துப்போன என்னைப் பாத்து நடுங்கிப்போறான். எனக்கு ஆத்திரம் வருகுது. அவன் பயப்பிடுகிறதைக் கண்டு எனக்கு எரிச்சல் வருகுது. எதிர்த்துக் கேட்கமாட்டினம் எண்ட துணிவிலைதானே இவங்கள் இப்பவும் தெருவிலை சேட்டை விடுகிறாங்கள் எண்டு நான் கொதிச்சுப்போறன்.

தொடர்ச்சி 12 ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலண்டன் மரதன் ஓட்டப்போட்டியும் தமிழ் இளைஞர் மண்பற்றும்

கடந்த 15-03-98 அன்று இங்கிலாந்திலுள்ள கேஸ்ரிங் என்னுமிடத்தில் நடைபெற்ற 13 மைல் அரை மரதன் போட்டியில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் சார்பில் கலந்துகொண்ட வீரர்களை படத்தில் காண்கிறீர்கள். இவர்களில் 13 பேர் இம்மாதம் 26 ம் திகதி நடைபெறவுள்ள லண்டன் மரதனில் 26 மைல் தூர மரதன் ஓடவுள்ளனர். இந்த வீரர்களால் சேகரிக்கப் படும் நிதி தமிழீழப் பகுதியில் போர்ச்சூழலில் தமது உடல் அங்கங்களை இழந்து அங்க வீனர்களான சிறுவர்கள், முதி யோர்களுக்காக நடாத்தப்படும் புனர்வாழ்வுக் கழகத்தின் திட்டங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். கடந்த ஆண்டு முதற்தடவையாக புனர்வாழ்வுக் கழகத்தின் சார்பில் 10 மரதன் வீரர்கள் கலந்துகொண்டு 6820 பவுண்களை சேகரித்து தமிழீழத்தில் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் வேலைத் திட்டங்களில் ஒன்றான கல்வி வசதி இழந்து இருக்கும் சிறுவர்களின் ஆரம்பப் பாடசாலைகளுக்கு அனுப்ப வைக்கப்பட்டது.




மேலதிக விபரங்களுக்கு:-

**TRO**
**79 Hoe Street**
**Walthamstow**
**London E17 4 SA**
**U.K.**
**தொ.பெ. எண்:**
**0181 - 520 5876**

## தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் எட்டாவது சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி

**இடம் :**
**Dougles Eyre Sports Centre Coppermill Lane London E17**

**காலம் :**
**03 - 05 - 1998**
ஞாயிற்றுக்கிழமை
(வங்கி விடுமுறை)

**தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் 8ஆவது சர்வதேச உதைபந்தாட்டப் போட்டி**
உள்நாட்டுக்கழகங்களுடன் பிரான்ஸ், யேர்மனி, டென்மார்க், ஆகிய நாடுகளில் இருந்து வருகை தரும் போட்டியாளர்களுடன் நடைபெற உள்ளது.
கூழ், கொத்து றொட்டி, மற்றும் சுவையான தமிழீழ உணவு வகைகளுடன் சிறுவர்களுக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகளும் நடைபெறவுள்ளது.

உதைபந்தாட்டப் போட்டிக்கு வருக வருக என்று வரவேற்கின்றனர் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தினர்.

தொலை.பேசி.இல : 0181 - 520 5876

## பள்ளி எழுந்திடு.......
## (சிறுகதை)

இவனுக்கு நான் புத்தி சொல்ல வேணும். நடுத்தெருவிலை இப்படி ஒருத்தியோடை பகிடிவிடுறது அவளின்ரை மானத்தையே பறிக்கிற மாதிரி எண்டதைப் புரிய வைக்க வேணும்.

நான் சைக்கிள் கைபிடியை விடாமல் இறுக்கிப் பிடிச்சுக் கொண்டு அவனை நிமிர்ந்து பாக்கிறன்.

வாயிலை வந்தபடி அவனைத் திட்டுறன்.

'தெருவிலை இப்பிடிப் பகிடி விடுறதாலை ஒருத்தியின்ரை மனம் எந்தளவுக்குத் துன்பப்படுது எண்டது உனக்குத் தெரியுமோ? அவளின்ரை மன உணர்வுகளை எந்தளவுக்கு நீ சிதைக்கிறாய் எண்டது உனக்கு விளங்கேல்லையோ? இனிமேலும் இண்டைக்கு மாதிரிச் சேட்டை விட்டாய் எண்டால், என்ரை பேத்தியைக் கொண்டு உனக்கு செய்யக்கூடாத வேலையைச் செய்விப்பன்' எண்டு நான் அவனை வெருட்டுறன்.

அவன் ஒண்டும் பேசாமல் நிக்கிறான். இவனுக்கு இவ்வளவும் காணும் எண்டு நினைச்சுக்கொண்டு நான் சைக்கிள்ளை இருந்து கையை எடுக்கிறன். அவன் சைக்கிளை மிதிச்சுக்கொண்டு வேகமாய் போறான். திரும்பிப்பாக்காமல் வேகமாய் ஓடுறான். அவன் போனதையே பார்த்துக்கொண்டு நிண்ட நான் அவன் தெருவிலை மறைஞ்சாப்பிறகு அவளிட்டைத் திரும்பிறன்.

அவள்-அந்த நீலச்சட்டைக்காரி என்னைப் பாத்து நன்றியோடை சிரிக்கிறாள். நான் அவளைப் பார்க்கிறேன்.

இவளுக்கு என்ரை பேத்தியின்ரை வயதுதான் வரும். ஆனால் பேத்திக்கும் இவளுக்கும் கனக்க வித்தியாசம். என்ரை பேத்தியெண்டால் இப்படி ஒருத்தன் பின்னாலை துரத்திக்கொண்டு வரேக்கை சும்மா பாத்துக்கொண்டு வருவாளோ? உந்த ஆமிக்காரனையே வெருட்டிக்கொண்டு நிக்கிறவள் இவனைச் சும்மா விடுவாளோ?

எனக்கு அவளைப் பாக்க ஆத்திரம் வருகுது. இவள் இப்படி நசிஞ்சு கொண்டு, பயந்து, பேசாமல் இருக்கிறதாலைதான் நாயை மாதிரி கேவலப்படுத்துறாங்கள் எண்டு நான் நினைக்கிறன். நடுத்தெருவிலை தன்னை ஒருத்தன் மானங்கெடுக்கிறதை இவள் புரிஞ்சுகொள்ளாமல், இதெல்லாம் பகிடி எண்டு நினைக்கிறாளோ? அவங்கள் காலங்காலமாய் இவளை, இவளின்ரை உணர்ச்சிகளை அடக்கிறதை இவள் அறியாமல்...... 'உனக்கு வாயில்லையோ? நாக்கைப் பிடுங்கிறமாதிரி நாலு வார்த்தை எதிர்த்துப் போசத் தெரியாதோ? நீயெல்லாம் மானமுள்ள பொம் பிளைதானே' எண்டு நான் அவளைப் பாத்துப் பேசுறன்.

'உன்னை மாதிரி என்ரை பேத்தி இருந்தால் இந்த தெருவிலை நடக்கிறதே வேறையாமிருக்கும்' என்று நான் பெருமையோடை சொல்லுறன்.

அவள் தலையைக் குனிஞ்சுகொண்டு பேசாமல் நிக்கிறாள். 'இனிமேல் இப்பிடி ஒண்டும் தெரியாதவளாய் வாய் பேசாதவளாய் இருக்காதை தைரியமாய் நிமிர்ந்து நில். அதுக்குப் பிறகு உன்னை ஒருத்தரும் அசைக்கவே மாட்டினம்....'

நான் உணர்ச்சி வசப்பட்டு தெரு எண்டதையும் மறந்து பெரிய குரலில் கத்துறன்.

அவள் நிமிர்ந்து என்னைப் பார்க்கிறாள். என்ரை பேத்தியின்ரை கண்ணிலை தெரியிற உறுதியும், தெளிவும் இப்ப இவளின்ரை கண்ணிலை தெரியுது. அவள் சைக்கிளை எடுக்கிறாள். ஒண்டும் பேசாமல் நிமிர்ந்துகொண்டு நிதானமாய் சைக்கிளோடிப் போறாள்.

'இவள் இனிமேல் கோழை இல்லை' எண்டது புரிய நான் பூரிச்சுப் போய் நிக்கிறன். ஓடிப்போற வாகனங்களுக் கிடையிலை அவள் அடிக்கடி மறைய நான் எட்டி எட்டிப் பாக்கிறன். இந்த பெரிய வெளியைக் கடந்து அவள் மறையுறாள். ஒரு வெள்ளியைப் போலை அவளின்ரை உருவம் என்ரை கண்ணை விட்டு மறையுது.

'இவ்வளவு காலமாக சமைச்சதையும், பிள்ளையளைப் பெத்ததையும் தவிர வேறை என்னத்தைச் சாதித்தாய்.....' எண்டு பேத்தி அடிக்கடி என்னைக் கேக்கிறது இப்பவும் காதிலை ஒலிக்குது.

இவ்வளவு காலத்துக்குப் பிறகு - இத்தனை வயதுக்குப் புறகு இண்டைக்கு நானும் ஒருத்திக்கு விழிப்புக் கொடுத்திருக்கிறன். ஒருத்திக்கு உண்மையைப் புகத்தியிருக்கிறன் எண்டதை நினைக்கேக்கை என்னி லையே எனக்குப் பெருமையாய்க் கிடக்கு.

தூங்கிக்கிடக்கிற எங்கடை பெண் இனத்தை நாங்கள் தட்டி எழுப்ப வேணும்.' எண்டு மேடையிலை முழங்கிற என்ரை பேத்தியை நான் கெதியிலை போய்ப் பாக்கவேணும். நீ மட்டுமில்லை, இப்ப நானும்தான் ஒருத்திக்குத் திருப்பள்ளி எழுச்சி பாடியிருக்கிறன் என்பதை அவளுக்குப் பெருமையோடை சொல்லவேணும். ✳

*அவள் நிமிர்ந்து என்னைப் பார்க்கிறாள். என்ரை பேத்தியின்ரை கண்ணிலை தெரியிற உறுதியும், தெளிவும் இப்ப இவளின்ரை கண்ணிலை தெரியுது. அவள் சைக்கிளை எடுக்கிறாள். ஒண்டும் பேசாமல் நிமிர்ந்துகொண்டு நிதானமாய் சைக்கிளோடிப் போறாள்.*

*'இவள் இனிமேல் கோழை இல்லை' எண்டது புரிய நான் பூரிச்சுப் போய் நிக்கிறன். ஓடிப்போற வாகனங்களுக்கிடையிலை அவள் அடிக்கடி மறைய நான் எட்டி எட்டிப் பாக்கிறன். இந்த பெரிய வெளியைக் கடந்து அவள் மறையுறாள். ஒரு வெள்ளியைப் போலை அவளின்ரை உருவம் என்ரை கண்ணை விட்டு மறையுது.*

## கிரிசாந்தி கொலை வழக்கு.....

இராணுவத்தினரைக் கைது செய்ய வேண்டிய நிலை உருவானது. இந்தவகையில் இதனை ஒரு கண்துடைப்பு நடவடிக்கையாகவே அரசு மேற்கொண்டுள்ளது. இதற்கு, இவ்வாறான விவகாரங்களில் கடந்த காலத்தில் அரசு நடந்து கொண்ட விதத்திலேயே ஆதாரங்களைச் சுட்டிக் காட்ட முடியும். அதாவது, ஏற்கனவே, இவ்வாறான விவகாரங்களை தவிர்க்க முடியாத காரணங்களினால் கைது செய்யப்பட்ட ஆயுதப்படையினர் எவருமே தண்டனை அனுபவித்ததாக இல்லை. இதற்கு கொழும்பில் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட படுகொலைகள் உட்பட கிழக்கில் இராணுவத்தினர் மேற்கொண்ட படுகொலைகள் வரை குற்றவாளிகள் அரசினால் காப்பாற்றப்பட்டுள்ளமை எடுத்துக்காட்டாகும். இந்த வகையில் கிரிசாந்தி விவகாரத்தில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தப்பியோட அரசு வாய்ப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. குற்றச்சாட்டு தெளிவாக உறுதி செய்யப்படும் கட்டத்தில் வேறு வழியின்றி இத் தப்பியோடுவதற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

இதற்கும் அரசிற்கும் சம்பந்தம் இல்லை என்று யாரும் சாதிக்க முனைபவர்களாக இருப்பார்களேயானால், அவர்களும் நிச்சயமாக சிறீலங்கா அரசுக்கு உடந்தையானவர்களாகவே இருக்க முடியும். ✳

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்